2. (Banned Association) பான்டு அசோசியேஷன் தொடர்பு கொண்டு வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தால் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

3. மற்றும் சட்டப்படி முறையாக விசாரணை செய்யப்படாமல் இருந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். முறையான விசாரணை என்றால் என்ன என்பதைப் பற்றி சுப்ரீம் கோர்ட்டில் நடந்த அயர்ன் அண்டு ஸ்டீல் கேஸ் 1961-ல் சொல்லப்பட்டு இருக்கிறது. அதில் 4 முறைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்த முறையில் ஏதாவது ஒரு முறை பின்பற்றப்படாமல் இருந்தால் அதை அட்ஜுடிகேஷனுக்கு விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்யாமல் கூட 7-ம் தேதியே அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் அதற்குப் பாராட்டுவார்கள் என்று கூட நான் எதிர்பார்த்தேன்.

(முற்பகல் 9.50)

திரு. க. சுப்பு: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இப்படியே சந்தேகம் கேட்டுக் கொண்டே போகக் கூடாது. உட்காருங்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

1977 ஜூலை 15]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(6) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறை நுதலும் தரித்த நறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!"

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையிலே இந்த மன்றத்திலே பேசுவதற்குத் தான் வாய்ப்பு உண்டு. பாடுவதற்குக் கூட அனுமதி உண்டா? அப்படி என்றால், நான்கூட ஒரு பாட்டுப் பாடலாம் என்று நினைக்கிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்றத்தின் கடந்த கால நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும். பேசுவது போல், இதற்கு முன்பு பாடியும் இருக்கிறார்கள்.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, பாடுவதுபோல் நடிக்கலாமா என்பதையும் அறிய விரும்புகிறேன். முத்தமிழில் நாடகமும் ஒன்று. எனவே, நடிக்க அனுமதி உண்டா? (சிரிப்பு.)